அசல்

29.7.41

அசல் -1

No. 118 (c)
26.12.70
Pages 298 To 301

ஐயா,

பண்டிதரும் பாமரருமான எல்லாத்தமிழ்மக்களும் இசையின்பத்தை யூட்டும் நோக்கத்துடன் தமிழ்ப்பாடல்களைப்பரப்பவேண்டி செட்டிநாட்டரசர் ராஜா ஸர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் இப்பல்கலைக்கழகத்திற்குப்பெரியதோர் நன்கொடையளித்திருக்கின்றார். கச்சேரிகளிற்பாடப்படும் எல்லாப் பாடல்களும் தமிழ்ப்பாடல்களாகவே இருக்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டும் என்பது அவரது நோக்கம். தெலுங்கு இந்துஸ்தானி முதலியபாட்டுக்களைத்தமிழர் கூட்டங்களிற் பாடுவதில் தாய்மொழியின் கவரும் தன்மையில்லாமையால், பொருளுணர்ச்சியால் உள்ள பயன் கிடைக்காமற்போகிறது. தமிழ்மக்கள் இவ்வுணர்ச்சியை மீண்டும் அடையப்பண்ணுவதே இப்பொழுது சங்கீதகலாசாலை மேற்கொள்ளும் உயரிய வேலை.

ஆதலின் இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 14ம் தேதியிலிருந்து 17ம் தேதி வரையில் நிகழவிருக்கும் மகாநாட்டில் ஒத்துழைத்துக்கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். கூட்டத்தில் நிகழும் இசைக்கச்சேரிகளில் பாடப்படும் எல்லாப்பாடல்களும் தமிழிற்றானிருக்கும். மேலும் இந்த மகாநாடு பல சங்கீதசபைகளுக்கும் ஓர்வழிகாட்டியாக இருக்கும் என்றும், அதையப்பின்பற்றி அவைகளும் தங்களுடைய ஆதரவில் முழுதமிழ்ப்பாடற்கச்சேரிகளையே நடத்திவர வேண்டும் என்றும் கோரப்படுகிறது.

தாங்கள் இசைவளர்ப்பதையும், கர்நாடகசங்கீதத்தை உயிர்ப்பித்து மேன்மேலும் பரவச்செய்வதையும் உமது வாழ்நாளின் முக்கிய நோக்கமாகக் கொண்டு, அவ்விசைவளர்ச்சியில் மிகவும் ஈடுபட்டவரென்று நன்கு அறிந்திருப்பதால், மேற்படி முயற்சியில் தங்களுடைய அரிய அறிவுரைகளையும் தீவிரமான ஒத்துழைப்பையும் பேராவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

அதிக அவகாசம் அளிக்காமல் தங்களை இவ்வாறு கேட்பதால் தங்களுக்குச் சிரமமென்று நான் அறிவேன். ஆனால் பழந்தமிழ்ப்பாடல்களுக்கும் புதிய கவனங்களுக்கும் ஏற்பட்டபோட்டிகள் செப்டம்பர்மாதம் நடத்தவேண்டியிருப்பதால் என்னையும் யாம்மேற்கொண்டுள்ளகாரியத்தையும் கருதிப்பொருட்படுத்தாதிருக்குமாறு வேண்டுகிறேன். இக்கூட்டத்தில் உங்கள் ஒத்துழைப்பை வேண்டி உங்களுக்குச்சௌகரியமானநாள் அல்லது நாள்களையும், நீங்கள் பாடவிருக்கும் தமிழ்ப்பாட்டு வரிசையையும், உங்களை ரயில்வே ஸ்டேஷனிலேயே நல்வரவேற்கவும், நீங்கள் இங்கு தங்குவதற்கான வசதிகளைச்செய்வதற்கும் அனுகூலமாகத் தாங்கள் இங்கு வரக்கூடிய நேரம் முதலியவற்றையும் குறித்தனுப்ப வேண்டுகிறேன். தமிழுக்காகவும் தமிழிசையின்பொருட்டும் தாங்கள் மேற்கொள்ளும்

அசல்

No·118(d)
26·12·70
Pages 301-304
திருத்தம் திருத்தவும்

இந்தச்சர்வகலாசாங்கிதாபகரும், இம்மாகாணத்திலேயே இசைக் கலாசாலையை முதன்முதல் ஏற்படுத்தியவருமான செட்டிநாட்டரசர் ராஜாஸர் அண்ணுமலைச்செட்டியார் அவர்கள் இந்நாட்டிலுள்ள தமிழ்ப்பாடல்களைப்பெருக்குவதற்கும், இப்பொழுது மறக்கப்பட்டொழிந்த பழையபாடல்களைப்பொதுமக்களிடையே பரப்புவதற்குமான புதியமுயற்சியில் ஈடுபட்டு அக்காரியங்களைத்தொடங்கியிருக்கிறார்கள் என்பது நீங்கள் அறிந்தவிஷயம். புதியபாடல்களியற்றி நீங்கள் ஆற்றும் அரிய பணிகள் பலரும் அறிந்தது. அப்பாடல்கள் அனைத்தையும் தொகுத்து அச்சிடுவதுடன், தாங்கள் ஏற்கனவே மேற்கொண்டுள்ள புதிய பல பொருள்களைத்தழுவிச்செய்யப்படும் இதர கவனங்களுக்கும் இன்னும்பாடப்பெற வேண்டிய புதியவிஷயங்களில் பாடல்களியற்றுவதற்கும் உங்கள் பணியையே சிறப்பாகஎடுத்துக்காட்டித்தூண்டுவதும் எமது நோக்கமாகும்.

ஆகையால் நீங்கள் இயற்றியுள்ள பாடல்களின் பிரதியொன்று கொடுத்துதவி நீங்கள் ஒத்துழைக்க இயலுமா? சிலபாடல்கள் சுவடிகளிலேயே இருக்கக் கூடும். அவைகளைப்பிறர் அச்சிமொழு உதவக்கூடுமோழுல் தயவுசெய்து ஓர்பிரதி செய்து எனக்குஅனுப்புமாறு வேண்டுகிறேன். இன்னும் அந்தகையபாடல்களை இயற்றும் உங்களுடைய சிறந்த இலக்ஷியத்தை வளர்ப்பதுதான் என்னுடைய ஒரே நோக்கம். சங்கீதகலாசாலையார் அப்பாடல்களைப்பிரசுரிப்பதற்கு நீங்கள் இசைந்தால், அவர்கள் அப்பணியை மகிழ்ந்து ஏற்றுக்கொள்வார்கள். அல்லது நீங்களே அவைகளை அச்சிடுவதானுல் தயவுசெய்து ஓர் அச்சுப்பிரதியொன்று எனக்கு அனுப்பியுதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கான கிரயத்தொகை உடனே அனுப்பப்படும்.

நீங்கள்பாடி அச்சிடப்படாத பாடல்கள் நாட்டிற்பயிலுந் தகுதியுடையனவாதலின் பலஇடங்களிலும் பாடப்பெற வேண்டும் என்பது எனது அவல். செப்டம்பர்மாதத்தில் நிகழும் சங்கீதப்போட்டியில் நீங்களேனும் உங்கள்பிரதிநிதியேனும் கலந்துகொண்டால், நான் அதை மிகவும்பாராட்டுவேன். நீங்கள் போட்டியிற்கலந்துகொள்ள இயலாவிடின் என்னவகையில் தாங்கள் என்னைப்பயன்படுத்திக்கொள்ளக்கூடுமோ அதைக்குறிப்பிட்டால் அவ்வாறுசெய்யத்தயாராயிருக்கிறேன். மேலும் கீழ்க்கண்டவைகளைப்பற்றிய செய்திகள் எனக்குத்தெரிவிக்க வேண்டுகிறேன்.

1. அவசியமான குறிப்புகளைப்பெற்றோ பெறாமலோ உள்ள இசைப்பாட்டு நூல்களும் அவைகள் கிடைக்கும் இடம் முதலியனவும்

2. அச்சிடப்படாமல் ஏட்டிலிருக்கும் இசைப் பாடல்கள், அவற்றை இயற்றியவர், அவைகள் கிடைக்கும் இடம், அவற்றை மரபுமாறாமல் வைத்துக்கொண்டு பாடக்கூடியவர்.

அசல்

29.7.41

அசல் -1

3. பாடல்களை இயற்றக்கூடியவர்களின் பெயர், அவர்களால் பாடப்பட்டுள்ள பொருள்கள், அப்பாடல்களைப்பரப்பவேண்டிய நோக்கத்துடன் அவர்களைக் கண்டு விசாரித்தற்கு அனுகூலமான அவர்களுடைய முழு விலாசம்.

4. தமிழ்ப்பாடல்களைப்பரப்பும் தொண்டிலீடுபட்டுள்ளவர்களைப்பற்றியும், சங்கீதசபைகள் அல்லது பிரசங்கங்கள் இவைகளைப்பற்றியுமுள்ள முழுவிவரங்களையும் தந்தருளவேண்டும். இன்னும் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான தங்களுடைய உயர்ந்த கருத்துக்களைத்தெரிவிக்குமாறும்கேட்டுக்கொள்கிறேன்.

தமிழரது நாட்டுப்பாடல்களைப்பெருக்குவதற்கான பிற குறிப்புக்களும் இச்சர்வகலாசாலையார் இப்பொழுது மேற்கொண்டுள்ள முயற்சிக்குப்பெரிதும் உதவுவதாகும்.

தங்கள் அன்புள்ள,

அண்ணாமலைசர்வகலாசாலை,
அண்ணாமலைநகர்.
29/7/41

அசல்

32

29.7.41

அகர-1

15/9/41

16

No. 118
தமிழ்க்கருத்துக்
கருத்துக்கள்
1940-41

Pages ~~295~~-304

32

3

3036

அசல்

29.7.41

அசல்-1



இந்த அன்பார்ந்த கைங்கரியத்திற்குப்பிரதிப்ரயோசனமேயில்லை என்பதை உணர்கிறோம். தாங்கள் இங்கு வந்து தொண்டுபுரியும் நாட்களில் ராஜா சர் அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் நல்விருந்தினராக நீங்கள் இருக்கவிசைதல் வேண்டும். உங்களுடைய போக்குவரவுச்செலவுகள் சர்வகலாசாலையாரால் ஏற்றுக்கொள்ளப்படும். தங்களுடைய பதில் கிடைத்தவுடன் கூட்டத்தினது நிகழ்ச்சி முறைகளைப்பற்றிய முழுவிவரங்களையும் அனுப்பிவைக்கின்றேன்.

நாங்கள் மேற்கொண்டுள்ள இந்த நற்பணியில் சேர்ந்து எம்மையும் பெருமைபடுத்துவீரென்று பேரவாக்கொண்டு உங்கள் சம்மதத்தை பதில்கடிதத்தின் மூலமாக எதிர்பார்த்தவண்ணமிருக்கிறேன்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.
29-7-41

உங்கள் அன்புள்ள